# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029157

1. District : கிருஷ்ணகிரி — மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு — காவல்நிலையம் | Year: ஆண்டு | FIR No.: 1/AC/2018 — மு.த.அ. எண் | Date: 11-01-18 — நாள்

2. (i) Act சட்டம்: 120-B IPC — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: 7 of PC Act 1988 — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   07.10.17 ம் தேதி காலை 10.00 மணி
   16.12.17 ம் தேதி காலை 9.30 மணி
   26.12.17 ம் தேதி காலை 9.30 மணி
   10.01.18 ம் தேதி மதியம் 12.00 மணி

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11-01-2018 | Time : நேரம் 11.30 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11-01-2018 | Time : நேரம் 11.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி அச்சு பிரதி மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி ராயக்கோட்டை மின்வாரிய அலுவலகம் சுமார் 33 கி.மீ தென்-மேற்கு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.சேட்டு | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மாரியப்பன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 29 yrs. | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி கக்கனஅள்ளி கிராமம், தொட்டதிம்மனஅள்ளி அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. சந்திரன், வணிக ஆய்வாளர்,
   2) திருமதி. சிவசங்கரி, வணிக உதவியாளர்
   ராயக்கோட்டை மின்வாரிய அலுவலகம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. C. [illegible]
11/1/2018

[signature] 11/01/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S. MURUGAN
Inspector of Police

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [illegible] Krishnagiri
Rank: நிலை ....................No. எண் ........

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/AC/2018 சட்டப்பிரிவு 120-B IPC மற்றும் 7 of PC Act 1988 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

11.01.2018ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம், கருக்கனஅள்ளியை சேர்ந்த மாரியப்பன் மகன் சேட்டு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி அச்சுப்பிரதி மூலப்புகாரின் விவரம்: அனுப்புநர், எம். சேட்டு த/பெ மாரியப்பன், கருக்கனஅள்ளி, தொட்டதிம்மனஅள்ளி அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்கானிப்புத்துறை, கிருஷ்ணகிரி. ஐயா, நான் ராயக்கோட்டை பக்கமுள்ள கருக்கனஅள்ளி கிராமத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். கருக்கனஅள்ளியில் எனக்கு சொந்தமாக உள்ள 21/4 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துவருகிறேன். அந்த விவசாய நிலத்தில் புதிதாக போர் போட்டு, அதற்கு விவசாயதிற்கான இலவச மின் இணைப்பு வேண்டி 17.08.2016ம் தேதியில் ராயக்கோட்டை மின்சார வாரிய அலுவலகத்தில் உதவி பொறியாளரிடம் விண்ணப்பம் கொடுத்தேன். பின்னர் தட்கல் சுயநிதி மின் இணைப்பு திட்டத்தில் சேர விரும்பினால் ரூபாய் 2,75,000/- செலுத்தி சேர்ந்துகொள்ளுமாறு தெரிவித்து எனக்கு 29.08.2017ம் தேதியில் ராயக்கோட்டை மின்சார வாரிய அலுவலகத்திலிருந்து நோட்டீஸ் வந்தது. அந்த நோட்டீசை எடுத்துக்கொண்டு 19.10.2017ம் தேதியில் காலை சுமார் 09.00 மணிக்கு ராயக்கோட்டை மின்சார வாரிய அலுவலகத்தில் சென்று கேட்டபோது, C.I வஜ்ஜிரம் அவர்களை பாாக்குமாறு சொன்னார்கள். உடனே அங்கிருந்த C.I வஜ்ஜிரம் அவர்களை பார்த்தபோது, தட்கல் திட்டத்தில் விண்ணப்பித்தால் சீக்கிரமாக மின் இணைப்பு கிடைத்துவிடும் என்றும் விரைவில் ரூபாய் 2,75,000/- D.D ஆக கட்டவேண்டும் என்றும், D.D ஆக எடுத்துக்கொண்டு தன்னை வந்து பார்க்குமாறும் சொன்னார். நான் 05.10.2017ம் தேதியில் ரூபாய் 2,75,000/-க்கான D.D எடுத்துக்கொண்டு, 07.10.2017ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு C.I வஜ்ஜிரம் அவர்களை பார்த்தேன். அப்போது

அவர் என்னிடமிருந்த D.D ஐ வாங்கி அலுவலகத்தில் கொடுத்து அதற்கான இரசீது எண் 0509398ஐ என்னிடம் கொடுத்துவிட்டு, மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்வதற்கு ரூபாய் 5,000/- தனக்கு தனியாக கொடுக்குமாறு கேட்டார். தற்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், எங்க நிலத்திற்கு வந்து வஜ்ஜிரம் அவர்கள் அளவு எடுத்துக்கொண்டு போனார். பின்னர், 16.12.2017ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு ராயக்கோட்டை மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று C.I வஜ்ஜிரம் அவர்களை பார்த்தபோது, ரூபாய் 5000/- தனக்கு கொடுத்தால் மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்வதாக சொன்னார். நான், அதற்கு ரசீது கொடுப்பீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர், இரசீது எல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம், அந்த பணத்தில் AE-க்கு கொஞ்சம் கொடுத்து வேலையை முடிக்க முடியும் என்று சொன்னார். நான் பிறகு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மீண்டும் 26.12.2017ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு ராயக்கோட்டை மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று C.I வஜ்ஜிரம் அவர்களை பார்த்தபோது, ரூபாய் 5000/- தனக்கு கொடுத்தால்தான் அதில் அதிகாரிகளுக்கு கொஞ்சம் கொடுத்து வேலையை முடிக்கமுடியும் என்றும், மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்றும் உறுதியாக சொன்னார். நான் பிறகு வருவதாக சொல்லிவிட்டு வந்தவிட்டேன். மீண்டும் 10.01.2018ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு ராயக்கோட்டை மின்சார வாரிய அலுவலகத்திற்கு நானும் எங்க ஊரை சேர்ந்த எங்க மாமா வெங்கடேஷ் அவர்களும் சென்று C.I வஜ்ஜிரம் அவர்களை பார்த்து, என்னுடைய மின் இணைப்பு குறித்து கேட்டபோது, ரூபாய் 5000/- கொடுத்தால்தான் மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்று சொன்னார். நான் என்னுடைய கஷ்டத்தை தெரிவித்தபோது, சரி இப்போதைக்கு ரூபாய் 2,000/-மாவது கொடுத்தால்தான் அதை AEக்கு கொடுத்து வேலை உத்தரவு பெற்று, மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கேட்டார். நான் தற்போது அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், தற்போது செலவுக்கு ரூபாய் 500/- கொடுக்குமாறு என்னிடம் கேட்டு வாங்கிக்கொண்டார். பின்னர், என்னை அலுவலகத்திற்குள் சென்று ரூபாய் 1000/-ஐ CA விடம் செலுத்துமாறும்

சொன்னார். அதன்படி, நான் அலுவலகத்திற்குள் சென்று CA சிவசங்கரி அவர்களிடம் 1000/-ஐ கொடுத்து இரசீது போடுமாறு கேட்டேன். அதற்கு அவர், நான் ரூபாய் 5000/- கொடுப்பேன் என்று C.I வஜ்ஜிரம் அவரிடம் சொன்னதாக சொல்லியிருந்ததாகவும், அதை தருமாறு கேட்டார். அதற்கு நான் தற்போது பணம் கொண்டுவரவில்லை என்றேன். உடனே சிவசங்கரி அவர்கள் C.I வஜ்ஜிரம் அவர்களுக்கு போன்செய்து, சேட்டு ரூபாய் 5000/- கொடுக்கவில்லை, என்ன செய்யலாம் என்று கேட்டார். அதற்கு C.I வஜ்ஜிரம் அவர்கள் என்ன பேசினார் என்ற விவரம் தெரியவில்லை. உடனே CA சிவசங்கரி என்னிடம் ரூபாய் 1000/- கொடுக்குமாறு கேட்டு வாங்கி, ரூபாய் 520/-க்கு இரசீது என் AB 0453460ஐயும், ருபாய் 75/-க்கு இரசீது என் AB 0453461ஐயும் என்னிடம் கொடுத்தார். மீதி பணம் குறித்து சிவசங்கரி அவர்களிடம் கேட்டபோது, அவருக்கு செலவுக்காக எடுத்துக்கொண்டதாக சொன்னார். மேலும் C.I வஜ்ஜிரம் அவர்கள் சொன்னதுபோல பணம் கொடுத்தால்தான் மின் இணைப்பு கிடைக்கும் என்றும் சொன்னார். எனவே, எனக்கு மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய, அவர்கள் இருவரும் கூட்டாக சேர்ந்து சதி திட்டம் போட்டு என்னிடம் ரூபாய் 2000/- லஞ்சமாக கேட்டுள்ளார்கள். வஜ்ஜிரம் மற்றும் சிவசங்கரி ஆகியோருக்கு ரூபாய் 2000/- லஞ்சமாக கொடுத்து மின் இணைப்பு பெற எனக்கு விருப்பமில்லை. எனவே, அவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxxxxx (எம்.சேட்டு) 11.01.2018. ஐயா, மேற்படி எழுத்துமூலமான புகாரை 11.01.2018-ம் தேதி காலை 11.30 மணிக்கு பெற்று முதற்கட்ட விசாரணை கோரி சென்னை ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பினேன். Sd/-xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 11/01/2018. ஐயா, 11/01/2018ம் தேதி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக 11/01/2018ம் தேதியிட்ட நமூனா எண் P.E.11/2018/TANGEDCO//KG-ன் படி 11.01.2018ம் தேதி மதியம் 12.30மணிக்கு முதற்கட்ட விசாரணை பதிவுசெய்யப்பட்டது. முதற்கட்ட விசாரணையில், ராயக்கோட்டை மின்சார வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் வணிக ஆய்வாளர் திரு.வஜ்ஜிரம் மற்றும் வணிக

உதவியாளர் திருமதி.சிவசங்கரி இருவரும் கூட்டாக சேர்ந்து, புகார்தாரரிடமிருந்து பணம் கேட்டு வாங்க வேண்டும் என்ற குற்ற நோக்குடன் சதித்திட்டம் தீட்டி, அதனைத் தொடர்ந்து, அவருடைய ஆழ்துளை கிணறுக்கு தட்கல் சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.2,000/-ம் லஞ்சமாக கேட்டதாக தெரியவருகிறது. எனவே ராயக்கோட்டை மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் வணிக ஆய்வாளர் திரு.வஜ்ஜிரம் மற்றும் வணிக உதவியாளர் திருமத.சிவசங்கரி ஆகியோர் மீது கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/AC/2018 u/s 120-B IPC and 7 of Prevention of Corruption Act, 1988-படி 11.01.2018-ம் தேதி மாலை 16.30 மணிக்கு முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். Sd/- xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 11/01/2018. முதல் தகவலறிக்கையின் அசலையும், புகாரையும் கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(Signature) 11/01/18
Inspector of Police
V&AC, Krishnagiri